ஆயிரம் ஆயிரம் திபங்களை உமக்காகவே ஏற்றுகிறோம்
விழி ஆறுகள் பாய்ந்திட வாசமலர் உமக்காகவே தூவுகிறோம்
தேவனின் கோவிலில் மணியோசை உங்கள் காதினில் கேட்கிறதா
இந்தக்காயர்கள் நாம் அழும் பேரோசை கரும்புலிகளே கேட்கிறதா

வாழ்வின் வசந்தங்களை துறந்து சுயத்தின் சுயங்களை துறந்து
உங்கள் உயிர் கொடையின் அதிர்வுகளால் எங்கள் ஆண்மா அழுதுகொண்டே இருக்கிறது

ஆயிரம் ஆயிரம் திபங்களை உமக்காகவே ஏற்றுகிறோம்
விழி ஆறுகள் பாய்ந்திட வாசமலர் உமக்காகவே தூவுகிறோம்

முகமும் தெரியாது உங்கள் முகவரி தெரியாது
இடமும் தெரியாது உங்கள் படமும் கிடையாது
மகனா மகளா அயலா உறவா எதுவும் தெரியாது
எனினும் நீங்கள் எமக்காய் தானே வெடித்தீர் என்பது தெரியும்
உங்கள் நினைவில் நாங்கள் பெரிதாய் தானே இருந்தோம் என்பதும் தெரியும்
தலைவனை நம்பிய வேங்கைகளே வெடி தாங்கிய வேங்கைகளே
உயிர் கொடுத்தாடிய வேங்கைகளே கருவேங்கைகள் ஆகிய வேங்கைகளே

ஆயிரம் ஆயிரம் திபங்களை உமக்காகவே ஏற்றுகிறோம்
விழி ஆறுகள் பாய்ந்திட வாசமலர் உமக்காகவே தூவுகிறோம்

அடியும் தெரியாது உங்கள் முடியும் தெரியாது
அழகும் தெரியாது உங்கள் குரலும் புரியாது
ஆணா பெண்ணா அவரா இவரா எதுவும் தெரியாது
விடியும் திசையில் ஒளியாய் தானே வெடித்தீர் என்பது தெரியும்
உங்கள் வெடியின் அதிர்வால் உலகில் தமிழர் நிமிர்ந்தார் என்பதும் தெரியும்
தலைவனை நம்பிய வேங்கைகளே வெடி தாங்கிய வேங்கைகளே
உயிர் கொடுத்தாடிய வேங்கைகளே கருவேங்கைகள் ஆகிய வேங்கைகளே

ஆயிரம் ஆயிரம் திபங்களை உமக்காகவே ஏற்றுகிறோம்
விழி ஆறுகள் பாய்ந்திட வாசமலர் உமக்காகவே தூவுகிறோம்
தேவனின் கோவிலில் மணியோசை உங்கள் காதினில் கேட்கிறதா
இந்தக்காயர்கள் நாம் அழும் பேரோசை கரும்புலிகளே கேட்கிறதா

ஆயிரம் ஆயிரம் திபங்களை உமக்காகவே ஏற்றுகிறோம்
விழி ஆறுகள் பாய்ந்திட வாசமலர் உமக்காகவே தூவுகிறோம்